


துப்பாக்கிச் சூடு, குண்டு வெடிப்பு, தற்கொலைப் படைத் தாக்குதல். எல்லாம் சரிதான். ஏதோ ஓரளவுக்கு அதிர்ச்சி அலை எழுப்ப இதெல்லாம் உதவுகின்றன என்பதை மறுக்கமுடியாது. ஆனால், ஹிஸ்புல்லா எதிர்பார்த்தது இதுவல்ல. கண்டிப்பாக அல்ல.

ஒரு காரியம் செய்யவேண்டும். அது உண்டாக்கும் அதிர்ச்சி, ஒரு பூகம்பத்துக்கு நிகரானதாக இருக்கவேண்டும். அமெரிக்கா அலற வேண்டும். இஸ்ரேல் துடிதுடிக்க வேண்டும். அமெரிக்க ஆதரவு தேசங்கள் அத்தனையும் கதிகலங்கி நடுத்தெருவுக்கு வரவேண்டும். தாங்கள் யார், எப்படிப்பட்டவர்கள் என்பதை தேங்காய் உடைத்ததுபோல வெளியே காட்டுவதாக அமையவேண்டும்.

இதற்கு என்ன செய்யலாம்?

ஒரு யுத்தத்தைக் காட்டிலும் ஒரு பெரிய ஆள் கடத்தல் இதற்கு உதவும் என்று முடிவு செய்தது ஹிஸ்புல்லா. 1983-ம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்தே இந்த யோசனை அவர்களுக்கு இருந்தது என்றாலும், அது செயல்வடிவம் பெறுவதற்கு மேலும் சில காலம் ஆனது. எதிரி முகாமில் உள்ள யாராவது ஒரு முக்கியஸ்தரைக் கடத்திப்போய்விடுவது, எதிரிகளின் தன்னம்பிக்கையைக் குலைக்கும் விஷயத்தில், பெரும்பங்காற்றும் என்பது அவர்களது கணிப்பு.

அப்படிக் கடத்தப்படும் ஆசாமியைக் கடும் சித்திரவதைக்கு உட்படுத்தி, அந்தத் தகவலை மீடியாவுக்கும் தந்தால், அதிர்ச்சியின் மதிப்பு இன்னும் அதிகரிக்கும் என்று, திட்டத்துக்கு ஒரு பின்னிணைப்பு அளித்தவர் இமத் ஃபயாஸ் மக்னியா.

‘இதையெல்லாம் தியரியாகப் பேசிக்கொண்டிருந்தால் போதாது; ஏதாவது ஒரு காரியத்தை நீயே செய்துகாட்டு’ என்று ஃபயாஸுக்கு லைசென்ஸ் கொடுத்தது ஹிஸ்புல்லா மேலிடம். இந்த ஹிஸ்புல்லா மேலிடம், கடந்த சில வாரங்களாக அடிக்கடி உருவமும் பெயரும் அற்று அடிக்கடி இங்கே வந்துபோய்க்கொண்டே இருக்கிறதே என்று தோன்றுகிறதல்லவா? கவலைப்படாதீர்கள். விரைவில் அந்தப் பிரச்னையைத் தீர்த்துவிடலாம். ஹிஸ்புல்லாவின் பயங்கர நடவடிக்கைகளை முழுமையாகப் புரிந்துகொண்டுவிடுவதன்மூலம், அந்த இயக்கத்தின் மூளைகள் எப்படிப்பட்டவை என்பதைத் தெரிந்துகொண்டுவிட முடியும். அதன்பின்னால் முகங்களைப் பார்த்தால் போதாது? யதேஷ்டம்.

விஷயத்துக்கு வருவோம். மக்னியாவுக்குக் கடத்தல் லைசென்ஸ் கிடைத்ததும், அவர் தேர்ந்தெடுத்த நபர், சி.ஐ.ஏ.வின் லெபனான் பிரிவு இயக்குனர் வில்லியம் ஃப்ரான்ஸிஸ் பக்லே (William Francis Buckley).

1928, மே 30-ம் தேதி பிறந்தவரான பக்லே, அமெரிக்க ராணுவத்தில் நீண்ட நெடுங்காலம் பணியாற்றிய அனுபவம் உள்ளவர். பணி உயர்வின் மூலம் அவர் சி.ஐ.ஏ.வுக்கு அனுப்பப்பட்டு, படிப்படியாக முன்னேறி, சி.ஐ.ஏ.வின் லெபனான் பிரிவின் இயக்குனராகப் பணியாற்ற பெய்ரூத் வந்தவர். அடுத்த ஐந்து வருடங்களில் அவர் சி.ஐ.ஏ.வின் முதன்மை இயக்குனராகவே ஆகிவிடக்கூடியவர் என்கிற பேச்சு இருந்தது. அவரைத்தான் ஃபயாஸ் குறிவைத்தார்.

மார்ச் 16, 1984-ம் வருடம் அது நடந்தது. உண்மையிலேயே மேற்குலகம் முழுவதையும் அதிர்ச்சியடைய வைத்த அந்தக் கடத்தல் சம்பவம்.

அன்றைக்கு வெள்ளிக்கிழமை. தனது வழக்கமான அலுவலகப் பணிகளை முடித்துவிட்டு, ஷட்டில் ஆடுவதற்காக மைதானத்துக்குப் போய்க்கொண்டிருந்தார் பக்லே. அவரது காரை, இரண்டு ஜீப்புகள் வழிமறித்தன.

முன்னதாக, அந்தச் சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏதும் உண்டாகிவிடக் கூடாது என்கிற முன் ஜாக்கிரதையுடன், ஐந்நூறு மீட்டர் தொலைவில் இரு புறங்களிலும் ஒரு செயற்கையான விபத்தை உண்டாக்கி வைத்து, சாலையை காலியாக வைத்துக்கொண்டுதான் அவர்கள் காரியத்தில் இறங்கியிருந்தார்கள்.

துப்பாக்கி முனையில் பக்லே தமது காரிலிருந்து இறக்கப்பட்டார். உடனடியாக அவரது டிரைவரை மயக்கமடையச் செய்து ஓர் ஓரமாக உருட்டிவிட்டு, அவர் வந்த காரின் நம்பர் ப்ளேட்டை மாற்றி, யாரோ ஓர் அடிப்பொடியை அதை ஓட்டிப்போகச் சொல்லிவிட்டார்கள். பக்லே, ஹிஸ்புல்லா போராளிகளின் ஜீப்பில் ஏற்றப்பட்டு, சீட்டுக்கடியில் கை, கால், வாய்க் கட்டுகளுடன் உருட்டப்பட்டார்.

ஜீப் பறந்து, காணாமல் போனது. மறுநாள் செய்தித்தாள்களுக்கு இதைக் காட்டிலும் தீனி வேறென்ன இருக்கமுடியும்?

சி.ஐ.ஏ. இயக்குனர் கடத்தப்பட்டார்.

அலறியடித்துக்கொண்டு லெபனானுக்கு விரைந்தது ஒட்டுமொத்த சி.ஐ.ஏ. படை. மறுபுறம் இஸ்ரேல் படைகளும் தேடுதல் வேட்டையில் இறங்கியது. வேறு வழியில்லாமல் லெபனான் அரசும் தேடுவது போன்ற பாவனையை மேற்கொண்டது.

இதெல்லாம் ரொம்பநாள் நீடிக்கவில்லை. கடத்திப்போன ஃபயாஸ், தெள்ளத்தெளிவாக மீடியாவுக்குச் செய்தி கொடுத்துவிட்டார்.

'கடத்தியது ஹிஸ்புல்லா. இப்போதைக்கு இயக்குனர் சௌக்கியமாக இருக்கிறார். எப்போதும் அப்படியே இருப்பாரா என்று சொல்லமுடியாது.'

அதன்பிறகுதான் அந்த பயங்கரம் ஆரம்பித்தது. இமத் ஃபயாஸ் மக்னியா என்கிற தீவிரவாதிக்குள், எப்படிப்பட்ட குரூரவாதி ஒருத்தன் ஒளிந்துகொண்டிருக்கிறான் என்று மேற்குலகம் தெரிந்துகொண்ட சந்தர்ப்பம் அது.

கடத்திச் சென்ற சி.ஐ.ஏ. இயக்குநரை ஒரு ரகசிய விமானத்தில் ஏற்றி டெஹ்ரானுக்கு (ஈரான்) அழைத்துப் போய்விட்டார் ஃபயாஸ். லெபனானுக்குள் அவரை வைத்திருப்பது கஷ்டம் என்று முடிவு செய்துதான், இந்த முடிவை அவர் மேற்கொண்டார்.

டெஹ்ரானில் ஒரு மறைவிடத்தில் அடைத்து வைக்கப்பட்ட பக்லேவுக்கு அந்த முதல்

தினத்திலிருந்தே சித்திரவதைகள் ஆரம்பமாயின. உடலின் ஒரு செண்டிமீட்டர் கூட பாக்கியில்லாமல் அவரை ரத்தம் சொட்டச் சொட்ட அடித்துத் தீர்த்தார்கள். பிறகு, நகங்கள் பெயர்த்து எடுக்கப்பட்டன. கையாலேயே அவரது தலைமுடி முழுவதுமாகப் பிடுங்கப்பட்டது. லெபனானில் சி.ஐ.ஏ. மேற்கொண்டிருக்கும் அத்தனை நடவடிக்கைகள் குறித்தும் அவரைப் பேசச் செய்வதுதான் ஃபயாஸின் நோக்கம்.

பக்லே என்ன பேசினார் அல்லது பேசினாரா என்கிற விவரம் தெரியவில்லை. ஏனென்றால், குறைந்தது பத்து நாளைக்கு ஒருமுறையாவது பக்லே அனுபவிக்கும் சித்திரவதைகள் குறித்த தகவல்கள் மீடியாவுக்கு வந்துகொண்டே இருந்தன. அவர் பேசியிருப்பாரானால், அந்தச் சித்திரவதைகளிலிருந்து ஒருவேளை தப்பித் திருக்கக்கூடும். அப்படி இல்லாமல், தொடர்ந்து அவரது நகங்கள் பிடுங்கப்பட்ட செய்தியும் விரல்கள் காணாமல் போன செய்தியும் சில நரம்புகள், தோலுக்கு வெளியே தெரிகின்றன என்கிற தகவலும் மட்டுமே வந்துகொண்டிருக்காது.

அவர் எங்கே இருக்கிறார், எப்படி மீட்பது? என்பது தெரியாத அமெரிக்க அரசாங்கம், லெபனான் மீது வெறித்தனமான தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட இஸ்ரேலுக்கு உத்தரவிட்டது.

காத்திருந்த இஸ்ரேல், கண்மண் தெரியாமல் லெபனான் மீது குண்டுவீச ஆரம்பித்தது. குறிப்பாக, ஷியா முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளைப் பார்த்துப் பார்த்து அடித்தார்கள். மணிக்கணக்கில் குண்டு மழை. திடீர் திடீரென்று பறந்து வந்து குண்டு பொழியும் விமானங்களின் தாக்குதலில் நூற்றுக்கணக்கான பெண்களும் குழந்தைகளும்கூடக் கொல்லப்பட்டார்கள். பள்ளிவாசல்கள் தரைமட்டமாயின. அலுவலகங்கள், மருத்துவமனைகள், வர்த்தக மையங்கள் அனைத்தும் இடிந்து தூள் தூளாயின. ஹிஸ்புல்லாவின் பதில் தாக்குதல் எப்போதும்போல் இருந்தது என்றாலும், ஒரு முடிவுக்கு வரக்கூடிய யுத்தமாக அது இல்லை. திடீரென்று உக்கிரமடைந்து, அமைதியடைந்து, மீண்டும் தீவிரம் கொண்டு, அடங்கி, ஆனால் நிற்காமல் தொடர்ந்துகொண்டு தான் இருந்தது.

எத்தனை நாள்? எத்தனை வாரங்கள், மாதங்கள்? ஒரு வருடமே ஓடிப்போய்விட்டது. உலகம் பக்லேவை ஒருவாறு மறக்கவே ஆரம்பித்துவிட்ட அந்த 444-வது தினத்தில், பெய்ரூத் நகரிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் ஒரு தேசிய நெடுஞ்சாலை ஓரமாக, ஒருநாள் அவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டது.

ரத்தம் உறைய வைக்கும் காட்சி. ஒரு மனிதன் தாங்கக்கூடிய சித்திரவதைகளே இல்லை அது. ஆள் அடையாளமே அடியோடு குலைந்துபோகும் விதத்தில் உடல் முழுவதும், முகம் முழுவதும் ரத்தத்தால் திருத்தி எழுதப்பட்டிருந்தது!

அதி சக்தி படைத்த அமெரிக்க அரசாங்கத்தின் மிக முக்கியமான அதிகாரி ஒருவர், அடையாளமே தெரியாமல் ஒரு சாலையோரம் கிடந்தார்!

யாருக்கும் பேச்சுமூச்சே இல்லை. பக்லேயை உடனடியாக அவரது சொந்த மாகாணமான விர்ஜீனியாவுக்கு எடுத்துப் போய்விட்டார்கள். இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஒரே ஒரு போதனையை மட்டும் அளித்துவிட்டு வந்தது.

"அனைத்து மத்தியக் கிழக்கு முஸ்லிம் தேசங்களையும் நீ சமாளித்துவிடலாம். ஹிஸ்புல்லா விஷயத்தில் மட்டும் திண்டாடப்போகிறாய்" (வில்லியம் வெப்ஸ்டர் என்கிற முன்னாள் சி.ஐ.ஏ இயக்குனர் இஸ்ரேல் அரசுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் இந்த வரி வருகிறது.)

பக்லே விஷயத்தில் அமெரிக்கா உள்பட, அத்தனை தேசங்களும் அடைந்த அதிர்ச்சியை நேரில் பார்த்துவிட்ட பிறகு, ஹிஸ்புல்லா தீர்மானமே செய்துவிட்டது. குரூரம்தான். வேதனை தரத்தக்க காரியம்தான். தனியொரு உயிரை வருத்திக் கொல்வதென்பது, யுத்த களத்தில் போரிட்டு எதிரியை

வீழ்த்துவதுபோல் இல்லைதான். ஆனாலும் இது எழுப்பும் அதிர்ச்சி அலைகளை யுத்தகளத்தில் எழுப்ப முடிவதில்லை. எதிரியின் ஆயுதபலம் அதிகமாக இருக்கிறது. தவிரவும் ஓர் அரசாங்கம் நடத்தும் யுத்தத்துக்கும் தனியொரு இயக்கம் நடத்தும் யுத்தத்துக்கும் வித்தியாசம் இருக்கிறது.

இப்படி யோசித்த ஹிஸ்புல்லா, தனது அடுத்தடுத்த தாக்குதல்களை அதிக இடைவெளியில்லாமல் திட்டமிட்டுக்கொண்டது.

ஏப்ரல் 12, 1984 அன்று ஸ்பெயினில் டொரீஜன் (Torrejon) என்கிற இடத்தில் இருந்த அமெரிக்கப் போர் விமானத் தளத்தை அடுத்த ரெஸ்டரண்ட் ஒன்றில் ஹிஸ்புல்லா போராளிகள் குண்டு வைத்தார்கள். எப்படியும் இருபது அமெரிக்க வீரர்களாவது மாட்டுவார்கள் என்பதே எண்ணம்.

குறி அதிகம் பிசகவில்லை. இறந்தது பதினெட்டு அமெரிக்கர்கள். மொத்தமாக 83 பேர் படுகாயமடைந்து, மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். இந்தத் தாக்குதலை நிகழ்த்தியவர்கள், ஹிஸ்புல்லாவின் ஸ்பெயின் பிரிவுப் போராளிகள்.

இந்தத் தாக்குதல் குறித்த விசாரணையை ஸ்பெயின் போலீஸ் நடத்திக்கொண்டிருந்தபோதே, ஒரு குவைத் ஏர்லைன்ஸ் விமானத்தைக் கடத்தி, பயணிகளில் நான்கு பேரைக் கொன்றார்கள். அதில் இரண்டு பேர் அமெரிக்கர்கள். உலகம் முழுவதும் ஹிஸ்புல்லாவை மிரட்சியுடன் பார்க்கத் தொடங்கிய நேரம் அது. எந்த நேரத்தில் எங்கு, என்னவிதமான நடவடிக்கையில் இறங்குவார்கள் என்றே கண்டுபிடிக்க முடியாமலிருந்தது.

தவிரவும், பெரும்பாலான இயக்கங்கள் ஒரு தாக்குதலுக்கும் அடுத்த தாக்குதலுக்கும் போதிய இடைவெளி விடுவது வழக்கம். இடைப்பட்ட காலத்தில் இருக்கும் சுவடு கூடத் தெரியாமல் எங்காவது போய்விடுவார்கள்.

ஆனால், ஹிஸ்புல்லா அந்த மாதிரி இடைவேளை எல்லாம் விடாமல் கண்ணை மூடிக்கொண்டு அடிக்கத் தொடங்கியதில், இஸ்ரேலும் அமெரிக்காவும் இதர நட்பு நாடுகளும் மிகவும் அச்சமடைந்தன. உலகெங்கும் உள்ள அமெரிக்கத் தூதரகங்களுக்கு எச்சரிக்கை அனுப்பப்பட்டது. அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானங்களுக்குக் கூடுதல் பாதுகாப்புத் தரப்பட்டது. செக்யூரிடி பரிசோதனைகள் என்கிற பெயரில், பயணிகளைப் பலமணி நேரம் நிற்கவைத்து உயிரை வாங்கினார்கள். இஸ்ரேலின் அனைத்து எல்லைகளிலும் நூற்றுக்கணக்கில் கூடுதல் செக்யூரிடி போட்டார்கள். நவீன ஆயுதங்கள் எது புதிதாக வாங்கப்பட்டாலும் உடனடியாக அதை லெபனான் எல்லைக்கு எடுத்துச் செல்லத் தொடங்கினார்கள்.

ஒரு கட்டத்தில் பாலஸ்தீன் போராளி இயக்கங்களே தேவலை என்று நினைக்கும் அளவுக்கு, ஹிஸ்புல்லா அவர்களுக்கு சிம்ம சொப்பனமாகிப் போனது. அந்த அச்சத்தை, கலவர உணர்வை, பதற்றத்தை நிரந்தரமாக்கும் விதத்தில் பிப்ரவரி 16, 1985 அன்று ஹிஸ்புல்லா அதிகாரபூர்வமாகத் தனது கொள்கை விளக்க அறிக்கையை வெளியிட்டது.

ஹிஸ்புல்லா சார்பில் பகிரங்கமாக வெளியிடப்பட்ட முதல் அறிக்கை அது. ஹிஸ்புல்லாவின் குரல் எப்படியிருக்கும் என்று அதுவரை யூகத்தில் மட்டுமே கேட்டுக்கொண்டிருந்த இஸ்ரேலுக்கு, அந்த நிஜக்குரல் அன்று அறிமுகமானது. An open letter என்கிற படு சாதாரணமாகத் தலைப்பிடப்பட்டிருந்த அந்த அறிக்கையின் சாரத்தை ஒருவரியில் சொல்வதென்றால், இப்படிச் சொல்லலாம் :

"இஸ்ரேல் அழியும்வரை எங்கள் யுத்தம் நிற்காது. போர் நிறுத்தம் என்கிற பேச்சுக்கே இடமில்லை."

நாடகத்தனமான வசனம் போலத் தோன்றலாம். ஆனால், ஹிஸ்புல்லாவில் விளையாட்டு என்கிற பேச்சுக்கே இடமில்லை. அவர்கள் அடுத்து ஈடுபட்ட அந்த டி.டபிள்யூ.ஏ. விமானக் கடத்தல் சம்பவம் ஒன்றுபோதும்., எப்படிப்பட்டவர்கள் என்று படம் வரைந்து பாகம் குறிப்பதற்கு.